பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 04 புதன்கிழமை 16.02.2022 கதிர் 103

### இனி இது ரகசியம் அல்ல!

அரசுக்கு எதிராக இன்னொரு பூதம் கிளம்பியிருப்பதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

மனித உரிமைகள் விடயத்தில் ராஜபக்ஷ ஆட்சிப் பீடம் பண்ணிய பாவங்களில் இருந்து அதற்கு விரைவில் விடுதலை கிட்டும் என்று நம்புவதற்கு ☞2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரி கொழும்பில் நேற்று மாபெரும் கையெழுத்துப் போராட்டம்!



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரி மாபெரும் கையெழுத்துப் போராட்டம் நேற்று கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குதவற்கான முதலாவது கையெழுத்துப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

மேலும், குறித்த போராட்டம் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருந்ததோடு கிழக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த கையெழுத்துப் போரட்டம் நேற்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் ☞2



# சட்டமா அதிபர் அரசியல்வாதிகளின் கையாள்போல் செயற்படவேகூடாது!

## பேராயர் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்து



சட்டமா அதிபர் என்பவர் அரசியல்வாதிகளின் கையாளாகச் செயற்படக்கூடாது என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

சமூக செயற்பாட்டாளர் செஹான் மாலக்க கடத்தல் பாணியில் கைது செய்யப்பட்ட சம்பவத்தையும் அவர் வன்மையாகக் கண்டித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கண்டனம் தெரிவித்தார். ☞2

## பேராயரும் கையெழுத்து!



கொழும்பு, பெப்.16

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரும் ஆவணத்தில் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் நேற்று கையெழுத்திட்டுள்ளார்.

## மூன்று மாதங்களுக்கு மின் துண்டிப்பு இல்லை

மூன்று மாதங்களுக்கு மின் துண்டிப்பை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படமாட்டாது எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்துள்ள அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். ☞2

## பி.சி.ஆர். சான்றிதழ்கள் வழங்கி பணம் சுருட்டும் தந்திரோபாயம்!

### யாழ் அரச வைத்தியசாலையில் அம்பலம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொண்டதாகக் காட்டி, சான்றிதழ் வழங்கி, அதற்காகப் பணத்தை பெற்றவர் மாட்டிக்கொண்டார் எனத் தெரியவருகிறது.

அயல்நாடு ஒன்றிற்கு பயணம் செய்யத் தயாரான ☞2

## யாழ்.நகரிலும் இன்று கையெழுத்து வேட்டை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் நகரில் இன்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. ☞2

## வவுனியா பொது வைத்தியசாலையில் கடந்த வருடம் 73 குழந்தைகள் மரணம்!

### வெளிவந்தது அதிர்ச்சித் தகவல்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த ஆண்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட 46 குழந்தைகள் உட்பட 73 குழந்தைகள் மரணமடைந்துள்ளன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட வினாவுக்குத் தற்போது மேற்படிப்புக்காகச் செல்லும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் கே.ராகுலனின் பதவி முத்திரையுடன் ☞2



## நெல்லியடியில் 60 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் சிக்கினர்!



818 கிராம் ஐஸ் போதைப் பொருளைக் கடத்த முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி நகரம், பருத்தித்துறை வீதியில் வைத்து நேற்று மாலை இருவரும் கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை அந்தோனிபுரத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரும், பருத்தித்துறையைச் சேர்ந்த 24 ☞2

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இடமில்லை. வினை விதைத்தவன் விளைவை அறுத்தே தீர வேண்டும். மனித உரிமை மீறல் பழி ஆட்சியாளர்களின் கழுத்தைச் சுருக்காக இறுக்குவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும் போல.

இந்த விடயத்தில் இப்போது, கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் முழு அளவில் களத்தில் இறங்கி விட்டார் என்றே தெரிகின்றது. வெளிப்படையாக முழு மூச்சில் அவர் செயற்படுகின்றார்.

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தச் செய்வதற்கான திட்டம் வத்திக்கானுடன் சேர்ந்து மூடிய அறைக்குள் தயாராகி இருப்பதாகவும் –

அது பற்றிய விவரங்களை இப்போதைக்கு வெளியிட முடியாது எனவும் –

பேராயர் நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கின்றார்.

"இந்த விடயத்தில் கிறிஸ்தவ மதபீடம் நீதி கேட்டு சர்வதேசத்தை நாடும் போது அதன் விளைவுகளையும் பொறுப்புகளையும் பாதிப்புகளையும் அரசாங்கம் தான் சுமக்க வேண்டி நேரும்" – என்றும் பேராயர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

''சமூக சேவையாளர் செஹான் சானக வீதியில் நடந்து செல்கையில் வானில் வந்த இனந்தெரியாதோரால் திடுதிப்பெனக் கடத்தப்பட்டிருக்கின்றார். ஆள்களைக் கைது செய்வது என்றால் கூட அதற்கு மனிதப் பண்பியல்பு முறை ஒன்று இருக்கின்றது. அதுவும் இப்போது மறுக்கப்பட்டு, மீண்டும் வெள்ளை வான் கடத்தல் யுகம் ஆரம்பமாகி விட்டதோ என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. நாட்டின் சட்ட மா அதிபருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் ஒரு விடயத்தைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்துவது உங்கள் பணியோ, பொறுப்போ அல்ல. அதை மறந்துவிடாதீர்கள்." – என்று வெளிப்படையாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார் பேராயர் மல்கம் ரஞ்சித்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விவகாரம் இம்முறை ஆராயப்படுவதற்கு முன்னர் – அதாவது வரும் 3ஆம் திகதிக்கு முன்பு – வத்திக்கானுக்கும், அதைத் தொடர்ந்து அங்கிருந்து அமெரிக்காவுக்கும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் திடீர் பயணங்களை முன்னெடுக்க விருக்கின்றார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அதன் தாக்கமான விளைவை – பிரதிபலிப்பை – இலங்கை அரசு ஜெனிவாவில் எதிர்கொள்ள வேண்டிநேரும் என்பது எதிர்பார்க்கப்படும் விடயம்.

★ ★ ★

சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பாக இருந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் இரவு வேளையில் போதையில் புகுந்து தமிழ் கைதிகளின் தலையில் பிஸ்டலை வைத்து மிரட்டிய சம்பவம் நடந்து நீண்டகாலமாகி விட்டது.

கடும் எதிர்ப்புக் கிளம்பியமையை அடுத்து சிறைச்சாலைப் பொறுப்பை மட்டும் லொஹான் ரத்வத்தை துறந்தார். அதைவிட வேறு எதுவும் நடக்கவில்லை.

பொலிஸ் விசாரணை, சிறைத்துறை விசாரணை, நீதி அமைச்சின் விசேட விசாரணை என்று பல ஆரவாரங்கள் எல்லாம் காட்டப்பட்டன. அவை எல்லாமே அந்த நேரத்துக் கண்துடைப்பு நாடகங்களே. அந்த விசாரணை நடவடிக்கைகள் எல்லாம் வழமைபோல் கிணற்றில் போட்ட கல்லாகி விட்டன.

ஆனாலும் அச்சுறுத்தலுக்கு உள்ளான கைதிகளுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு மட்டும் தூங்க விடப்படவில்லை. ஒன்பது கைதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த அடிப்படை உரிமை மீறல் மனு உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் எஸ். துரைராஜா, அச்சல வெங்கப்புலி, அர்ஜுன ஒபேசேகரா ஆகியோரைக் கொண்ட ஆயம் முன்னால் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. ஓகஸ்ட் 9ஆம் திகதி விசாரணைக்கு நாள் குறிக்கப்பட்டது.

மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

இந்த விவகாரம் தொடர்பில் பொலிஸார் குற்ற நடவடிக்கை சம்பந்தமான விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்று முன்னைய தவணையின் போது நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் அப்படி விசாரணை எதுவுமே நடக்கவில்லை என்று குறைபட்டார் சுமந்திரன்.

பொலிஸ் விசாரணை நடப்பதாக அரச சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

அப்படியா, நல்லது. பொலிஸ் விசாரணைகள் நடைபெற்றால், அது பற்றிய விவரங்களை, என்னென்ன நடவடிக்கைகள் எவ்வெப்போது மேற்கொள்ளப்பட்டன, இப்போது விசாரணையின் நிலைமை என்ன என்பவை பற்றிய விவரங்களை சட்டமா அதிபர் மூலம் உயர் நீதிமன்றுக்கு விவரமான அறிக்கையாகச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு நேற்று உத்தரவு வழங்கியிருக்கின்றது உயர்நீதிமன்றம். இனி என்ன? உயர்நீதிமன்றத்தின் காதுகளில் பூ வைப்பதற்காக, விசாரணை நடந்ததாகக் காட்டும் ஆவணங்கள் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

எது, எப்படி என்றாலும், நீதி அமைச்சு விசேடமாக ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை நியமித்து, தனி நபர் விசாரணை ஒன்றை நடத்தியமை வரை இவ்விடயத்தில் எல்லா விசாரணைகளும் படுத்துத் தூங்கினாலும், உயர்நீதிமன்ற விசாரணை – சுமந்திரன் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட முயற்சி – தீர்க்கமான ஒரு முடிவைத் தரும் என்று நம்பலாம்.

இதற்கிடையில் நீதித்துறை தொடர்பில் ஒரு கொசுறுத் தகவல் உண்டு.

பதுளையில் தமிழ் மகா வித்தியாலயத்துக்குள் அடாத்தாகப் புகுந்து, பெண் ஆசிரியை ஒருவரை பலபேர் முன்னிலையில் அச்சுறுத்தி முழங்காலில் நிற்க வைத்த ஊவா முதலமைச்சர் சாமர தஸநாயக்கா பற்றி வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அவர் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்.

இவ்விடயம் தொடர்பாக பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் சாமர தஸநாயக்கவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் அவரை நேற்று நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

பலர் பார்த்திருக்க அட்டகாசமாக அரங்கேறிய இந்த அடாத்துச் செயலில் குற்றவாளியாக அவர் அறிவிக்கப்படாமல் தப்பியது எங்ஙனம்?

இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது அதனை இணக்க சபைக்கு பரிந்துரைத்தார் நீதிவான்.

இவ்விடயத்தில் பொலிஸாருக்கு முதல் முறைப்பாட்டைச் செய்த கல்லூரி அதிபர் பவானி இரகுநாதனும் ஏனையோரும் இணக்க சபையில் சுமுகமாகத் தங்களுக்குள் பேசி, உடன்பாடு கண்டு, இணக்கமாகப் பிணக்கைத் தீர்த்துக் கொள்ள விரும்புகின்றார்கள் என்று நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தபட்டதால் இவ்வளவு பகிரங்கமாக அட்டகாசம் பண்ணியவருக்கு விடுதலைத் தீர்ப்பு.

சட்டம் எப்படியும் வளையும் என்பது இதைத்தானோ...?

– மின்னல் –

---

## நெல்லியடியில் 6...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 818 கிராம் ஐஸ் போதைப் பொருளின் பெறுமதி 6 மில்லியன் (60 இலட்சம்) ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

---

## சட்டமா அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்வதாக இருந்தால் அதற்கான நடைமுறைகள் உள்ளன. செஹான் விடயத்தில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. அவர் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டமை போலவே தெரிகின்றது. இது தொடர்பில் அவர் நேரலையைப்பதிவுசெய்திருக்காவிட்டால் இந்நேரம் எங்கிருப்பார் எனத் தெரியாது.

அத்துடன், சட்டமா அதிபர் என்பவர் அரசியல்வாதிகளின் கையாளாகச் செயற்படக்கூடாது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளை சட்டமா அதிபரால் அமுல்படுத்த முடியாமல் உள்ளது. ஆனால், நீதிக்காகக் குரல் கொடுப்பவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதனை அனுமதிக்க முடியாது – என்றார்.

---

## பி.சி.ஆர்.சான்றிதழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இரு வயது முதிர்ந்தவர்களிற்கு வீட்டிற்கு சென்று மாதிரிகளைப் பெற்றுவந்து, அவர்கள் வைத்தியசாலை விடுதியில் தங்கியிருப்பதுபோன்று போலிப் பதிவுகளைக் காட்டி பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு மேற்கொண்ட பரிசோதனைகளின் பெறுபேற்றை ஏற்கனவே ஒப்பமிட்ட நிலையில் பேணப்பட்ட வைத்தியரின் சான்றிதழ் படிவத்தில் பதிவு செய்து, அது வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்வோருக்காக வீடுகளுக்குச் சென்று பி.சி.ஆர். சோதனைக்கான மாதிரி பெறுவதோ, சான்றிதழுக்குப் பெருங் கட்டணம் அறவிடுவதோ அரச வைத்தியசாலைகளில் இல்லை.

இவ்வாறு சான்றிதழைப் பெற்ற முதியவர்கள் வெளிநாடு செல்லத் தயாரான சமயம், அவர்களின் உறவினரான மருத்துவர் ஒருவர் பி.சி.ஆர். சான்றிதழ் இன்றி விமானச் சிட்டைபெற்று பயணிக்க முடியாதே என்று குறிப்பிட்டு விசாரித்திருக்கின்றார். முதியவர்கள் நடந்த விவரத்தை ஒப்புவிக்க, வைத்தியர் அதிர்ச்சி அடைந்தார். ஏனெனில் தமது மாமன் முறையானவருக்கே இவ்வாறு மோசடியான சான்றிதழ் அரச வைத்தியசாலையின் பேரில் வழங்கப்பட்டமை மட்டுமன்றி, அதற்கு 15 ஆயிரம் ரூபா பணமும் பெறப்பட்டுள்ளது என்பதை அறிந்து அவர் கொதித்துப் போனார்.

இந்த விடயம் தற்போது வைத்தியசாலையின் நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதே நேரம் இவ்விடயத்தில் முறையான நடவடிக்கைகள் எடுக்கத் தவறினால் அதனை மத்திய சுகாதார அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு செல்லவும் ஆயத்தங்கள் இடம்பெறுகின்றன எனத் தெரிகின்றது

---

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதி சட்டத்தரணி எ.ஏ. சுமந்திரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரும் இந்தக் கையெழுத்துப் போராட்டம் கண்டி, காலி மற்றும் இரத்தினபுரி என நாடெங்கும் விஸ்தரிக்கப்படும் எனவும் நேற்றைய போராட்டத்தில் கலந்துகொண்ட தெற்கு அரசியல்வாதிகள் தெரிவித்தனர்.

---

## வவுனியா பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பெறப்பட்ட தகவலிலேயே இந்த அதிர்ச்சி விவரம் வெளியாகியுள்ளது.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரம் தகவல் உரிமைச் சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவரால் கோரப்பட்டிருந்தது. அதில் கடந்த 2015ஆம் ஆண்டு 45 குழந்தைகளும், 2016ஆம் ஆண்டு 47 குழந்தைகளும், 2017ஆம் ஆண்டு 45 குழந்தைகளும், 2018 ஆம் ஆண்டு 58 குழந்தைகளும், 2019ஆம் ஆண்டு 52 குழந்தைகளும், 2020ஆம் ஆண்டு 48 குழந்தைகளும், 2021ஆம் ஆண்டு 73 குழந்தைகளும் மரணமடைந்துள்ளனர்.

அதில், 2021ஆம் ஆண்டு குழந்தை பிறக்கும் முன் அல்லது பிறக்கும்போது விடுதி 5 இல் 8 குழந்தைகளும், விடுதி 7 இல் 16 குழந்தைகளும், குழந்தை பிறந்த பின் விடுதி 7 இல் 3 குழந்தைகளும், குழந்தைகளுக்கான விசேட அவசர சிகிச்சைப் பிரிவில் 46 குழந்தைகளுமாக 73 குழந்தைகள் மரணமடைந்துள்ளனர். கடந்த 6 வருடங்களில் அவசர சிகிச்சைப் பிரிவில் அதிகரித்த சிசு மரணமாக இது பதிவாகியுள்ளதுடன், மொத்த சிசு மரணங்களிலும் 2021ஆம் ஆண்டே அதிக இறப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

சுகாதார, மருத்துவத்துறையானது வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நிலையிலும், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலும் 73 குழந்தைகள் 12 மாதங்களில் இறந்துள்ளதுடன், பல்வேறு கனவுகளுடன் தமது பிள்ளைக்காக ஏங்கி இருந்த பல பெற்றோர் நடைபிணங்களாகவும், மன அழுத்தங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

---

## மூன்று மாதங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதற்கமைய, பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மின் துண்டிப்பை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---

## யாழ்.நகரிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இன்று காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை கையெழுத்துத் திரட்டப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எ.ஏ.சுமந்திரனின் ஏற்பாட்டில் இடம் பெறும் இதற்கான நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.



# தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு கோதுமை மா நிவாரணம் வழங்க ஏற்பாடு

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, பெப். 16

ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 867 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாதாந்தம் 15 கிலோ கோதுமை மாவை சலுகை விலையில் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியது.

'பொதுமக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சினைகளை குறைப்பதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல்' என்ற நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதனைத் தொடர்ந்து வர்த்தக அமைச்சர் தலைமையிலான குழுவொன்று நிவாரணம் வழங்குவது தொடர்பான தீர்மானத்தை பரிசீலித்து பரிந்துரையை வழங்கிய நிலையில் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# தனித்தனி அமைச்சரவை உப குழுக்கள் நியமனம்

சீனா, ஜப்பான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மூலப் பொருள்கள் மற்றும் கைத்தொழில் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான மாற்று முறைகளை அடையாளம் காணுவதற்காக மூன்று தனித்தனி அமைச்சரவை உப குழுக்களை நியமிக்க அமைச்சரவை அனு மதி வழங்கியுள்ளது.

அதன்படி, மூன்று நாடுகளுடன் கலந்துரையாட அமைச்சவை உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

சீனாவுடன் கலந்துரையாடுவதற்காக வெளிவிவகார அமைச்சரின் தலைமையில் வர்த்தக அமைச்சர், கைத்தொழில் அமைச்சர் மற்றும் பெருந்தோட்ட அமைச்சரின் பங்கேற்பில் உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானுடன் கலந்துரையாடுவதற்காக வெளி விவகார அமைச்சரின் தலைமையின் கீழ் சுகாதார அமைச்சர், வெகுஜன ஊடக அமைச்சர் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்கள் அடங்கிய உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய கிழக்கு நாடுகளுடன் கலந்துரையாடுவதற்காக வெளிவிவகார அமைச்சரின் தலைமையின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டு மற்றும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர் உள்ளடங்களாக உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

# வாகன இறக்குமதி தடையை மீறி சொகுசு கார்கள் இறக்குமதியா?

வாகன இறக்குமதிக்கான தடையை மீறி எந்த வாகனங்களும் இறக்குமதி செய்யப்படவில்லை என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலை ஊடாக இரண்டு சொகுசு கார்களை கனரக வாகனம் ஒன்று ஏற்றிச்சென்ற காணொலி சமூக ஊடகங்களில் பரவியது.

இந்நிலையில் இது தொடர்பாக விளக்கமளிக்கும் போதே சுங்க பிரதிப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சுதத்த சில்வா இதனைத் தெரிவித்தார்.

மேற்படி வாகனங்கள் கடுவெலயில் உள்ள முதலீட்டுச் சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட இலங்கை வாகன பழுதுபார்க்கும் தொழிற்சாலையால் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக கொண்டுசெல்லப்பட்டன எனக் கூறியுள்ளார்.

# வடமாகாண இளைஞர் விவகார அலகால் சூம் செயலி ஊடான இலவச வகுப்புக்கள்

இதுவரை இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தவறவிட்ட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளையோர்களுக்கு மீண்டும் ஓர் அரியவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண இளைஞர் விவகார அலகால் 'சிகரம் தொடு' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெற்று வரும் மொழிப்பயிற்சி வகுப்புக்கள் மற்றும் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் தொடர்பான கலந்துரையாடலை செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமைகளில் எமது அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் 10 மணிக்கு நாடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் பங்குபற்றும் தினம் தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் தொலைபேசி மூலம் அறியத்தரப்படுகின்றது. அறிவுறுத்தல் கிடைக்கப்பெறாதவர்கள் வியாழக்கிழமை பங்குபற்ற முடியும்.

செவ்வாய், வியாழன் - யாழ்.மாவட்ட விண்ணப்பக்காரர்கள், புதன்கிழமை - கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட விண்ணப்பக்காரர்கள்.

மேலதிக விவரங்கள் 021 222 2203, செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம் தொடர்புகொள்ளலாம்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொடூரச் சட்டத்துக்கு எதிர்ப்பு

**மனித மாண்புகளுக்கு மாறான – மிகக் கொடூரமான – நாகரிக வாழ்வியல் முறைமைகளுக்கு முரணான –பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அடியோடு நீக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தல் தேசிய ரீதியில் கிளர்ந்திருப்பது கண்கூடு.**

**நேற்றுக் கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் இலங்கைத் தமிழரசுக் கட்சி நடத்திய கையெழுத்துப் போராட்டம் இந்தச் செய்தியைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றது.**

**இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து, பல தரப்பட்டவர்களும் இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் பங்குபற்றியமையும் –**

**தெற்கின் மூலை முடுக்குகளுக்கெல்லாம், இந்த விடயத்தை எடுத்துச் சென்று, ஆங்காங்கே இந்தக் கையெழுத்து இயக்க நடவடிக்கைகளைப் பொது நிகழ்வாக முன்னெடுப்போம் என்று நேற்றைய கையெழுத்து இயக்க நிகழ்வில் பங்குபற்றுவதற்கு வந்திருந்த தரப்பினர்கள், பிரமுகர்கள் வாக்குறுதி அளித்துச் சென்றிருக்கின்றமையும் –**

**இவ்விடயத்தில் காத்திரமான ஒரு செய்தியை வெளிப்படுத்தி நிற்கின்றன.**

**இந்தக் கொடூர – குரூர – சட்டத்தை நீக்க வேண்டும் என்ற குரல் இதுவரை நாட்டுக்குள் வடக்கு, கிழக்கில் இருந்து மட்டுமே ஒலித்தது.**

**மிகப் பிற்போக்குத் தனமான இச்சட்டத்துக்கு எதிராகக் கண்டனங்களும், எதிர்ப்புகளும், அதை நீக்க வேண்டும் என்ற வற்புறுத்தல்களும் சர்வதேசத் தரப்புகளில் இருந்து வந்த போதிலும், தென்னிலங்கை இவ்விடயத்தில் இது வரை காலமும் பாராமுகமாகவே இருந்து வந்தது.**

**ஆனால், அந்தப் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருப்பது இப்போது வெளிப்படையாகியுள்ளது.**

**இந்தக் குரூரச் சட்டத்தை நீக்குமாறு கோரும் வலியுறுத்தலில் பங்குபற்றாமல், பட்டும் படாமலும் இது வரை இருந்து வந்த முஸ்லிம் சமூகத்தவர்கள், 2019 ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்களை அடுத்து, இந்த மிருகத்தனமான சட்டம் தனது குரூரக் கரங்களை முஸ்லிம்கள் மீதும் மோசமாகக் காட்டியமையை அடுத்து, இந்தச் சட்டத்துக்கு எதிராக அவர்கள் மத்தியிலும் சீற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அவர்களின் பிரதிநிதிகளும் நேற்றுக் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நடந்த போராட்டத்தில் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.**

**ஜே.வி.பியினர் இது போன்ற சட்டங்களினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்கள் என்பதால், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் அவர்கள் இயல்பாகவே இணைந்து கொண்டுள்ளனர்.**

**இந்த மூர்க்கத்தனமான – எதேச்சாதிகாரத்துக்கு வழி செய்கின்ற – முறையற்ற – சட்டத்தை நாடு விலக்கிக் கொள்ளாவிட்டால், ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ள ஜி.எஸ்.பி. வரிச் சலுகை போன்றவற்றை இழந்து, நாடு பெரும் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி நேரும் என்ற யதார்த்தமும் தென்னிலங்கை மக்களுக்கு இப்போது நன்கு புரியத் தொடங்கியுள்ளது.**

**இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிகைக்கு புதிய ஆதரவுத் தளம் கிட்டியிருக்கின்றமைக்கு இந்த யதார்த்தப் புறநிலைமை தென்னிலங்கைக்குப் புரியத் தொடங்கியிருப்பதும் ஒரு காரணமாகும்.**

**இலங்கை அரசு இந்தச் சட்டம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கடந்த வாரம் அளித்த உறுதிமொழிகளுக்கு அமைய, அதனை அடியோடு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் நாடும், அரசும்,பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும்.**

## உயர் அரச, அரசியல் செல்வாக்கு உள்ளவர்களை கருவிகளாக பாவித்து மன்னாரில் கனிய மணலகழ்வு

உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களைக் கருவிகளாகப் பாவித்து உரிமங்களைப் பெற்றுக் கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை ஆஸ்திரேலிய கம்பனி தொடர்வதாக நாங்கள் அறிகின்றோம், இந்த மணல் அகழ்வால் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எந்த ஒரு நன்மைகளும் இல்லை என மன்னார் சுற்றாடலைப் பாதுகாப்போம் அமைப்பினர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

மன்னாரில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது 'மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம்' அமைப்பினர் இதனை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

மன்னாரில் சுமார் 5 வருடங்களுக்கு மேலாகக் கனிய மணல் ஆய்வுகள் மிகவும் இரகசியமான முறையில் ஆஸ்திரேலிய நிறுவனத்தால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மன்னாரிலுள்ள சுற்றாடலைப் பாதுகாப்போம் அமைப்பு பெற்றுக்கொண்ட தகவல்கள் அடிப்படையில் மதத் தலைவர்கள், பிரஜைகள் குழு, பொதுமக்கள் இணைந்து எமது எதிர்ப்பை வெளியிட்டு ஜனாதிபதி வரை தெரிவித்திருக்கிறோம்.

அண்மையில் எங்களோடு கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் எங்களுடைய ஆதங்கங்களைக் கேட்டு இந்த மாதத்தின் இறுதியில் ஆஸ்திரேலியத் தூதருடன் மன்னாரில் உள்ள எமது குழுக்களையும் இணைத்து பேச்சு நடத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மன்னார் தீவுக்குள் வசிக்கிறார்கள். இரண்டு கிலோ மீற்றர் அகலமும் 30 கிலோ மீற்றர் நீளமும் கொண்ட ஒரு குறுகிய தீவு பகுதி முற்றுமுழுதாக குறுகிய காலத்தில் கடலில் மூழ்கும் நிலை ஏற்படும். 1980 ஆம் ஆண்டுகளில் மன்னார் நகரச் செயற்பாடுகளை உயிலங்குளத்தில் அமைப்பது தொடர்பாக ஒரு திட்டம் அரசிடம் இருந்தது. ஒரு சில அரசியல் காரணங்களால் அவை தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த மன்னார் தீவுக்குள் மாவட்ட செயலகம், பொது வைத்தியசாலை, வங்கிகள் நான்கு, தேசிய பாடசாலைகள் என முக்கியமான அனைத்துச் செயற்பாடுகளும் இந்தத் தீவுக்குள் தான் இருக்கின்றன. இந்த மணல் அகழ்வுகள் தொடருமாக இருந்தால் கடலுக்குள் மூழ்கி மன்னார் மாவட்டம் செயலிழந்து சூனியப் பிரதேசமாக மாறிவிடும்.

ஆகவே எங்களால் முடிந்த அளவு மக்களைத் திரட்டி அரசு அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி வரை எங்களுடைய ஆதங்கத்தைத் தெரியப்படுத்துகிறோம். தொடர்ந்து தெரியப்படுத்துவோம்.

ஆனால், தாங்கள் எந்த அளவுக்கு எதிர்ப்புகளைத் தெரிவிக்கின்றோமோ அந்த அளவிற்கு ஆஸ்திரேலிய நிறுவனம் இதை ஆய்வு செய்வதில் முனைப்புக் காட்டி வருகிறார்கள்.

எமது எதிர்ப்புகளால் புவிச்சரிதவியல் திணைக்களம் இதற்கான உரிமத்தை நிறுத்தி இருந்தது. ஆனால், தற்போது ஆராய்ச்சி செய்வதற்கு புவிச்சரிதவியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

அது எவ்வாறு நடைபெற்றது என்பதை எங்களால் அறிய முடியாமல் இருக்கிறது. இதில் மிகவும் வேதனையான விடயம் என்னவென்றால் இந்த கனிய மணல் அகழ்வு தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற உயர் அரச அதிகாரிகளுக்கு எதுவும் தெரியாது என்று கை விரிக்கின்றார்கள்.

எது எப்படி இருந்தாலும் உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களைக் கருவிகளாகப் பாவித்துத் தான் இந்த உரிமங்களைப் பெற்றுக் கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை ஆஸ்திரேலிய கம்பனி தொடர்வதாக நாங்கள் அறிகிறோம்.

இந்த மணல் அகழ்வால் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எந்த ஒரு நன்மைகளும் இல்லை. இதனால் ஆதாயம் பெறப் போவது அந்நிய நாடுகளும் அவர்களோடு சேர்ந்த இயங்குகின்ற சில முகவர்களும் தான் எனத் தெரிவித்துள்ளனர்.

## கீழே விழுந்து கிடந்த பணத்தை கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்தார் பொலிஸ் அதிகாரி

கீழே விழுந்து கிடந்த பணப்பையை கண்டெடுத்து அதனை உரிமையாளரிடம் கையளிக்க அங்கு கொலபெலஸ்ஸ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அங்குகொலபெலஸ்ஸ ஏக்கர் 50 பிரதேசத்தில் வசித்து வரும் சமிது வணிகசிங்க என்ற இளைஞனின் பணப்பை காணாமல் போயுள்ளது. அதில் 64 ஆயி ரம் ரூபா பணம், தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன இருந்துள்ளன.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அந்தப் பணப்பை அங்கு கொலபெலஸ்ஸ நகரில் விழுந்து கிடந்த நிலையில் கண்டெடுத்துள்ளமையுடன் அதனை உரிமையாளரிடம் கையளித்துள்ளார்.

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவரை பயங்கரவாத தடுப்பு பிரிவில் முன்னிலையாக அழைப்பு



தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரை முன்னிலையாகுமாறு மன்னார் பொலிஸார் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அன்றையதினம் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் எடுத்து வருமாறு அவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

## பயங்கரவாதக் குற்றச்சாட்டில் கைதானவர் 12 வருடங்களின் பின்னர் நேற்று விடுதலை

கொழும்பு, பெப். 16

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 12 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காகக் கொழும்பில் நிதி சேகரித்து கொடுத்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த கந்தப்பு ராஜசேகர் என்பவரே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளார்.

2010ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட அவர் சார்பில், நேற்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நல்லாட்சியில் முறைசாரா முறையில் ஆள்சேர்ப்பு செய்யப்பட்டோருக்கு பயிற்சி

முந்தைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின்போது கொள்வனவுக்கான கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகளின் தொழில்நுட்பக் கோளாறுகளைச் சரிசெய்து, அவற்றை உடனடியாகப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

போக்குவரத்து, போக்குவரத்து ஒழுங்குபடுத்தல், பஸ் சேவைகள், ரயில்வே மற்றும் மோட்டார் தொழிற்றுறை அமைச்சுக்களின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டம், ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின்போது, 160 ரயில் பெட்டிகளுக்கான கொள்வனவுக் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 120 ரயில் பெட்டிகள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும், அவற்றில் 40 பெட்டிகள் மாத்திரமே போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்படாத ஏனைய பெட்டிகளை உடனடியாகச் சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்குமாறு, இக்கூட்டத்தின் போது ஜனாதிபதி, உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

போக்குவரத்துச் சேவையில் இணைக்கக்கூடிய வகையில் இருப்பினும் சேவைக்குப் பயன்படுத்தப்படாதுள்ள பஸ்களைப் பழுதுபார்த்து, குறுந்தூரச் சேவைகளுக்குப் பயன்படுத்துமாறும் அதன் மூலம், கிராமிய மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு கிட்டுமென்றும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அனைத்துத் தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களுடன் நட்புணர்வுடன் பணியாற்றுவதன் மூலம், போக்குவரத்துக் கட்டமைப்பிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்றும் ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, மக்களை ஒடுக்கும் தொழிற்சங்கப் போராட்டங்களை நிறுத்துவதற்கு, அனைத்துத் தரப்பினரும் புரிந்துணர்வுடன் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

போக்குவரத்துச் சேவையை முறையாகக் கொண்டுசெல்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும். தொழில்நுட்பம் மற்றும் விதிமுறைகளை நெறிப்படுத்துவதன் மூலம் பல சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள முடியும். அதே போன்று, உல்லாசப் பயணிகளை இலக்குவைத்து, சுற்றுலாப் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் பயணிகள் சேவையை முன்னெடுக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

தற்போது சேவையில் அதிகப்படியான ஊழியர்கள் காணப்படுவது பாரிய பிரச்சினையாக உள்ளதென்று அதிகாரிகள் எடுத்துரைத்த போது, எந்தவோர் ஊழியரையும் பணிநீக்கம் செய்யாது, உரிய பயிற்சிகளைவழங்கி, அவர்களிடமிருந்து அதிகபட்ச சேவையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான முறைமையொன்றை உடனடியாகத் தயாரிக்குமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எரிபொருள் பிரச்சினை மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி, எதிர்வரும் காலத்தில் பொதுப் போக்குவரத்துக்காக 100 மின்சார பஸ்களை இறக்குமதி செய்வதற்குள்ள இயலுமை தொடர்பிலும், இதன்போது நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

போக்குவரத்துச் சேவை தொடர்பில் பொதுமக்களின் குற்றச்சாட்டுகள் குறித்து அவதானம் செலுத்தி, தரமான போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கு அனைவரும் உழைக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பஸ் கட்டணத்தை அதிகரித்து, பயணிகளை சிரமத்துக்கு உள்ளாக்க அரசாங்கம் தயாராக இல்லை என்றும் போக்குவரத்துத் துறையில் காணப்படும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுத்து நிறுத்துவதன் மூலம், போக்குவரத்துச் சேவையில் தற்போது காணப்படும் சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்றும், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.



## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து; 78 வீத கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தகவல்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து கடலில் வீழ்ந்த மோசமான கழிவுப்பொருள்களில் 78 விகிதமானவை அகற்றப்பட்டுள்ளன என இலங்கையின் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை கூறியுள்ளது.

மீட்புநடவடிக்கைக்குப்பொறுப்பான அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனம் இந்தத் தகவலை வழங்கியுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் கூறியுள்ளார்.

இதேவேளை, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அழிவை அடுத்து கடலில் வீழ்ந்துள்ள கழிவுப்பொருள்களை அகற்றுவதற்காக சீன நிறுவனமொன்றுக்கு சொந்தமான இரண்டு கப்பல்கள் இலங்கை கடற்பரப்பிற்கு வந்துள்ளன.

சேதமடைந்த பொருள்களை அகற்றுவதற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்காக இந்த இரண்டு கப்பல்களாலும் பூர்வாங்க பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, மே மாதத்திற்குள் தமது பணிகள் அனைத்தும் நிறைவடையும் என சீன நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேலதிக வரிவிதிப்பில் இருந்து ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ்விற்கு விலக்கு!

### பஸில் உறுதி



வருடாந்தம் 200 கோடி ரூபா வருமானம் பெறுவோருக்கு மட்டுமே 25 சதவீத வரி ஒருமுறை அறவிடப்படும் என நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் மேலும் 9 நிதியங்களுக்கு இந்த வரியில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.


ஆண்டுக்கு 200 கோடி அல்லது அதற்கு மேல் வருமானத்தை ஈட்டும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் மீது 25 வீத மேலதிக வரியை விதிக்க வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது.

ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் இருந்தும் வரியை பெறும் முடிவுக்கு நிபுணர்கள், எதிர்க்கட்சி மற்றும் அரசாங்க உறுப்பினர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

எவ்வாறாயினும், ஈ.பி.எவ். மற்றும் ஈ.ரி.எவ். உட்பட 11 நிதிகள் இந்த மேலதிக வரிக்கு உட்படுத்தப்பட மாட்டா என அமைச்சரவைக்கு உறுதியளித்தார் என அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

## 240 கோடி அமெரிக்க டொலரை இந்தியாவிடம் கடனாகப் பெறத் திட்டம்

### அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு



இந்தியாவிடமிருந்து 240 கோடி அமெரிக்க டொலரைக் கடனாகப் பெறவுள்ளோம் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இம்மாதம் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 49 ஆவது அமர்வு இம்மாதம் 28 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், அங்கு ஆணையாளர் நாயகம் மிச்சேல் பச்லெட் இலங்கை தொடர்பாக முன்வைக்கவுள்ள அறிக்கை தொடர்பாக மார்ச் மாதம் 3 ஆம் திகதி கலந்துரையாடப்படவுள்ளது. அதன் பிரதியொன்று திங்கட் கிழமை வெளிவிவகார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் அதற்குப் பதிலளிக்கவுள்ளார் எனவும் அவர் இதன் போது மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பல்கலைக்கழக ஓய்வூதியர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை

அரசாங்க பல்கலைக்கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு அரசின் அதிகரித்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும், 23 வருடமாக எந்தவித ஓய்வூதிய அதிகரிப்புமின்றி இருப்பதாகவும் பல்கலைக்கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் அனைத்து அரச ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அதிகரிப்பு ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட்டதுடன், சமுர்த்தி பயனாளிகளுக்கும் அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

தனியார் துறையினருக்கும் அதிகரித்த கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசாங்க பல்கலைக்கழகங்களில் கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு அரசாங்கத்தின் 5 ஆயிரம் ரூபா அதிகரிப்பு கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை.

அத்துடன் அவர்கள் கடந்த 23 வருடங்களாக ஓய்வூதியக் கொடுப்பனவு திட்டத்தில் எந்தவித அதிகரிப்பும், மறுசீரமைப்புமின்றி இருந்து வருகின்றனர்.

அவர்களது ஓய்வூதியம் தொடர்பான சுற்றறிக்கையில் மூன்று வருடத்திற்கு ஒரு தடவை ஓய்வூதிய மறுசீரமைப்பு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் கடந்த 23 வருடமாக இது தொடர்பில் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், இதனால் பல்கலைக்கழகங்களில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் தற்போதைய பொருள்களின் விலையேற்றத்துக்கு மத்தியில் தமது ஓய்வூதியம் போதாமை மற்றும் ஏனைய அரச சலுகைகளையும் பெற முடியாமலும் பெரும் துன்ப நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட 5 ஆயிரம் ரூபா அதிகரிப்பை ஏனைய ஓய்வூதியர்களுக்கு வழங்கியது போன்று, பல்கலைக்கழகங்களில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கும் வழங்குவதுடன், தமக்கான ஒரு சீரமைக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி தம்மையும் வாழ வழிவிடுமாறும் பல்கலைக்கழகங்களில் இருந்து ஓய்வுபெற்றவர்கள் மேலும் கோரியுள்ளனர்.

# ஆறு இதழ்களில் ஆசிரியப்பணி மேற்கொண்ட ஊடக உலகின் ஜாம்பவான்

# எஸ். டி. சிவநாயகம்

## இன்று அவரது நினைவாக அஞ்சல் தலை வெளியீடு



- முருகபூபதி -

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை உலகின் ஜாம்பவான் என வர்ணிக்கப்பட்டவரும், பல புதிய தலைமுறை எழுத்தாளர்களை அறிமுகப் படுத்தியவரும், பல தமிழ் ஊடக வியலாளர்களின் ஞானத்தந்தையாக (God Father) கருதப்பட்டவருமான (அமரர்) எஸ்.டி. சிவநாயகம் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியினால் விதந்து பாராட்டப்பட்டவராவார்.

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பைச் சேர்ந்த இவரது ஊடகப்பணியும் சமயம் சார்ந்த சமூகப்பணிகளும் தலைநகரில்தான் விரிவடைந்தன.

1948 இல் தினகரன் பத்திரிகையில் பணியாற்றத் தொடங்கிய ஈழத்தின் மூத்த பத்திரிகையாளரான சிவநாயகம், கொழும்பில் தந்தை செல்வநாயகம் ஆரம்பித்த சுதந்திரன், மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பெரி. சுப்பிரமணியம் செட்டியார் தொடக்கிய வீரகேசரி ஆகியவற்றிலும் ஆசிரியராக பணியாற்றியவர். 1966 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி முதல் வெளியாகத்தொடங்கிய தினபதி தினசரியிலும் பிரதம ஆசிரியரானார்.

தமிழ்ப்பத்திரிகைத்துறையில் பழுத்த அனுபவம் மிக்க இவர், வெளியுலகிற்கு தன்னை பிரபல்யப்படுத்தாமல் அமைதி பேணியவர்.

எனினும், அந்த ஆழ்ந்த அமைதிக்குள் எரிமலைக்குரிய குணாம்சம் ஒளிர்ந்தது. முற்காலத்தில் வெளியாகும் தமிழ்த்திரைப்படங்களின் இயக்குநர்களின் பெயர்களும் தற்காலம்போன்று வெள்ளித்திரைகளில் தோன்றும். ஆனால், அவர்கள் இக்காலத்து இயக்குநர்கள் போன்று ரசிகர்கள் மத்தியில் திரையில் வலம்வந்து அறிமுகமாகமாட்டார்கள்.

முன்பிருந்தவர்கள், பின்னாலிருந்து இயக்கிய உந்துசக்திகளாகத்தான் வாழ்ந்து மறைந்துபோனார்கள்.

இன்றைய தமிழ்த்திரையுலகின் இயக்குநர்கள் திரைகளில் தோன்றுவதுபோன்று தற்கால பத்திரிகை ஆசிரியர்களும் பொதுமேடைகளில் தோன்றும் கலாசாரம் வந்துவிட்டது.

ஆனால், தினபதி அதன், ஞாயிறு பதிப்பு சிந்தாமணி ஆகியனவற்றின் பிரதம ஆசிரியர் சிவநாயகம் அவர்களை - இவை வெளியான காலகட்டத்தில் பொது மேடைகளில் காண்பது அபூர்வம்.

கிழக்கிலங்கையில் பெரியார் ஈ.வே.ராவின் பகுத்தறிவுக்கொள்கைகளை பரப்பிய முன்னோடியாகவும் இவர் அறியப்படுகிறார். தமிழகத்தின் முதல்வர் அறிஞர் அண்ணாவுடன் பழகியதன் அனுபவங்களை தொடர்கட்டுரையாக எழுதியவர். எனினும் இறுதிக்காலத்தில் சத்திய சாயி பக்தராகவும் வாழ்ந்து, 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி மறைந்தார்.

புட்டபர்த்தியில் 1975 ஆம் ஆண்டு நடந்த உலக சாயி நிறுவனங்களின் மகா நாட்டிலும் கலந்துகொண்டிருக்கும் அவர், கொழும்பில் சத்திய சாயி பாபா மத்திய நிலையத்தில் தொடர்ந்து 25 ஆண்டுகள் தலைவராகவும் இருந்து, சாயிபாபா அறக்கட்டளையையும் உருவாக்கியவர்.

தினபதி தினசரியில் தினமும் புதிய சிறுகதைகள் என்ற களத்தில் பல புதிய இளம்தலைமுறை எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி, எதிர்காலத்தில் அவர்களை ஆக்க இலக்கியவாதிகளாக்கிய பெருமையும் அவரைச்சாரும். அக்காலப்பகுதியில், இளம் மாணவர்கள் எழுத்தாளர்களாக தினபதியில் வளர்க்கப்பட்டார்கள்.

தினபதி, சிந்தாமணி, ராதா, சுந்தரி, தந்தி முதலான தமிழ் இதழ்களையும் தவஸ உட்பட சில சிங்கள இதழ்களையும் SUN என்ற ஆங்கிலத் தினசரியையும் அதன் ஞாயிறு பதிப்பையும் வெளியிட்ட சுயாதீன பத்திரிகை சமாஜம் என்ற பெரிய நிறுவனம் 1970 இல் நடந்த பொதுத்தேர்தலில் ரீமா -என். எம்,- பீட்டர் ஆகியோரின் கூட்டணி வெற்றியடைந்து பதவிக்கு வந்த காலத்தில், அந்த அரசின், சில நடவடிக்கைகளை விமர்சித்த காரணத்தால் வெறுப்புக்கும் ஆளாகி 1974 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி சீல்வைத்து பூட்டப்பட்டது. எனினும் தடை நீங்கி 1977 இற்குப் பின்னர் திறக்கப்பட்டது.

(07ஆம் பக்கம் பார்க்க)


தினபதி
THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA
இன விகிதாசார நியமனங்கள் இல்லையேல் அமைச்சர்கள் மீது நடவடிக்கை
அமைச்சரவை முடிவு இது என்று ரஞ்சன் அறிவிப்பு
திருமலை கோட்டை சிங்கள அகதிகள் முகாம் மூடப்படும்

# கிழக்கதனில் உதித்ததனால் ஒளியைத் தந்தோன்



உலகமெலாம் போற்றுகிற உயர்ந்த ஆற்றல்
ஒப்பற்ற ஆளுமையின் வடிவு என்றே
பலர் புகழும் பெருமையினைக் கொண்ட நல்ல
பண்பாளன் எஸ்.ரி.எஸ். பாரை வென்றோன்
நிலமுழுதும் நேசித்து அன்பால் நல்ல
நேர்மையுடன் செயற்பட்ட நிமிர்ந்த ஆசான்
வளமிகுந்த தன்னுடைய எழுத்தால் இந்த
வையமெலாம் காத்திடவே வழிகள் செய்தான்.

எவருக்கும் அஞ்சாமல் உண்மைதன்னை
எழுதியதால் பெரும் புகழை ஈட்டிக் கொண்டோன்
இவருக்கு நிகரே யார் என்றே ஏத்த
எப்புகட்கும் ஆளாகாதிருந்த ஐயன்
தவறுக்குத் துணைபோகா தனித்த தன்னின்
தாளாத நிமிர்வாலே தனித்து நின்றோன்
நவமான தன்னுடைய எழுத்தால் மட்டும்
நானிலத்தை ஆண்டுபெரும் புகழைக் கொண்டோன்

ஒப்பற்ற தனியாற்றல் தன்னால் இந்த
உயர் புகழை ஈட்டியவன் ஓர்ந்து நல்ல
தப்பற்ற ஆற்றல்களை தனியே கண்டு
தரணியிலே அவற்றையெலாம் மிளிரச்செய்தோன்
எப்பற்றும் இல்லாமல் இயங்கி நின்றோன்
ஏற்றமுற தமிழ்த்தாய்க்குப் பணிகள் செய்தோன்
வெப்புற்ற எதிரிகளும் போற்றும் நல்ல
வீறான புலமையதால் உயர்ந்து நின்றோன்.

கிழக்கதனில் உதித்ததனால் ஒளியைத் தந்து
கிளர்ந்தீழத் தமிழரினம் உயரச் செய்தோன்
பலரும் இவன் எழுத்தைக் கண்டேங்கி நின்று
பத்திரிகை உலகிற்கோர் பகலோன் என்று
தலையதனில் கரங்கூப்பி வணங்கி நின்றார்
தாழ்பணிந்து அவன்தனையே புகழ்ந்து நின்றார்
கலைகளெலாம் கற்றுயர்ந்து கனிந்து நின்ற
காவலனின் நூற்றாண்டு கண்டோம் வாழி!

மதுரையிலே மாநாடு நடந்த போது
மாண்புடனே என் உரையைக் கேட்டுள்வாங்கி
நிதம் அதனின் பெருமைதனை ஊரார் காண
நிமிர்ந்தெழுதி எனை உயர்த்தி வைத்த நாதன்
இதமுடனே எனையும் தன் மைந்தனாக
ஏற்றங்கள் செய்தேதான் வாழச் செய்தோன்
பதமலர்கள் தலை சூட்டிப் பணிந்து நின்றேன்
பண்பாளன் புகழதனைப் பாடி நின்றேன்.

கம்பனுக்கு கொழும்பில் ஒரு விழவைச் செய்யக்
காட்டியவன் கனிவுடனே துணைகள் செய்தான்
தம் பெரிய புகழதனைக் கொண்டு எங்கள்
தமிழ் விழவை உலகறியச் செய்த ஐயன்!
அம்புவியில் தமிழ் சுவைக்க அவரைப் போல
ஆர் உள்ளார்? அணுவுக்குள் அணுவாய் நின்று
தெம்பதனைத் தந்தேதான் தேற்றி வைத்த
தெய்வத்தை எந்நாளும் மறக்கப்போமோ?

சாயி அவன் திருவடியில் சரிந்து நின்று
சகமெல்லாம் நேசித்த பெரியோன் நல்ல
பாயிரமாய் எம் தம்மை விளக்கம் செய்து
பாரெல்லாம் புகழ் வளர்க்கத் துணையாய் நின்றோன்
ஆயிரமாய் வார்த்தைகளை அடுக்கினாலும்
ஐயன் சிவனாயகத்தின் அருமை தன்னை
வாயிருந்து வார்த்தைகளால் சொல்லப்போமோ?
வானிருந்து தெய்வமதாய் வாழ்த்தி நிற்பான்.

- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

## ஆறு இதழ்களில் ஆசிரியப்பணி மேற்கொண்ட .......













(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிந்தாமணியில் இலக்கியபீடம் என்ற பத்தியை சிவநாயகம் தொடர்ந்து எழுதியதுடன், பாரதி நூற்றாண்டு காலத்தில் நான் கண்ட பாரதி என்ற நீண்ட தொடரையும் வாராந்தம் எழுதியிருக்கிறார்.

சுயாதீன பத்திரிகை சமாஜம் எதிர்பாராதவிதமாக அதன் நிருவாகத்தினால் 1990 இல் நிரந்தரமாக மூடப்பட்டதும் சோகமான முடிவு. கொழும்பு பாமன் கடையிலிருந்து வெளியான மாணிக்கம் என்னும் கலை இலக்கிய மாத இதழுக்கும் சிவநாயகம் சிறிது காலம் ஆசிரியராக இருந்துள்ளார்.

தினபதி – சிந்தாமணி ஆசிரிய பீடங்களில் பணியாற்றியவர்களுக்கு சிவநாயகம் வழிகாட்டியாகவும் நல்லாசானாகவும் விளங்கியவர். அரசியல் சார்ந்த செய்திகளில் – முக்கியமாக அவற்றின் தலைப்புகளில் விவரணங்களும் காணப்படும்.

உதாரணத்திற்கு ஒரே ஒரு தகவலை மாத்திரம் சொல்கின்றேன்.

தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், 1977 இல் நடந்த பொதுத்தேர்தலையடுத்து எதிர்பாராதவிதமாக எதிர்க்கட்சித்தலைவரானார். அவ்வேளையில் தினபதியில் ஒரு செய்தியின் தலைப்பு இவ்வாறு இடம்பெற்றது.

தமிழ் ஈழம் கேட்ட 'அமிர்' இலங்கை அரசின் காரும் வீடும் ஏற்பாரா..?

அத்துடன் நில்லாமல் இந்தத்தலைப்புக்கு இருமருங்கும் ஒரு காரின் படத்தையும் ஒரு வீட்டின் படத்தையும் சிவநாயகமோ அல்லது அவரது தூண்டுதலினால் வேறு யாரோ அதில் பதிவுசெய்தனர்.

ஏற்கனவே 1965 இல் நடந்த பொதுத்தேர்தலில் அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டை தொகுதியில் ஆ. தியாகராசா என்ற முன்னாள் கல்லூரி அதிபர் ஒருவரிடம் தோற்றிருந்தவர். அதன் பின்னர் அவரும் அவர் மனைவி மங்கையற்கரசியும் தமிழ் உணர்ச்சியைதூண்டும் விதமாக மேடைகளில் முழங்கி இளம்தலைமுறையினரை எழுச்சி கொள்ள வைத்தனர்.

அதன் விளைவே வட்டுக்கோட்டை மாநாட்டில் தனித்தமிழ் ஈழத்தீர்மானம். ஆயினும் அமிர், எதிர்பாராதவிதமாக எதிர்க்கட்சித்தலைவராகி, அன்றைய ஜே.ஆர். அரசு வழங்கிய சௌகரியங்களை ஏற்கநேர்ந்தது.

முன்னர் தனித்தமிழ் ஈழம் கேட்டவர், இன்று எவ்வாறு காரும் வீடும் ஏற்கிறார்...? என்ற தொனிப்பொருளில் கேலிச்சித்திரமாக அல்ல, செய்தியாகவே தினபதியில் அந்த அரசியல் மாற்றம் வெளியானது.

எஸ்.டி. சிவநாயம் சிந்தாமணியில் தொடர்ந்து எழுதிய நான் கண்ட பாரதி இதுவரையில் நூல் வடிவம் பெறவில்லை. அவ்வாறு அதனை அவர் வெளியிட விரும்பி குறிப்பிட்ட பத்திரிகை நறுக்குகளை பாதுகாத்து வைத்திருந்த தகவலும் தெரியவந்துள்ளது. யாராவது அதனை வெளியிட ஆவண செய்யவேண்டும் என்று இந்த அங்கத்தின் ஊடாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அவரை கௌரவித்து நினைவுகூரும் வகையில் இன்றைய தினம் இலங்கை அரசு அஞ்சல் தலை வெளியிடுகிறது.

இதற்கான முயற்சியில் ஈடுபட்டவர் முன்னாள் அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான (அமரர்) சந்திரசேகரனின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியான இலக்கிய, ஊடக ஆர்வலர் எச். எச். விக்கிரம சிங்கா என்பதை அறிந்து, அவருக்கும் தொலைபேசி ஊடாக வாழ்த்து தெரிவித்து விட்டே இந்த ஆக்கத்தையும் நிறைவுசெய்கின்றேன்.

காலைக்கதிர் Kalaikkathir

# மலையக மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுகின்றன

## ராமேஷ்வரன் தெரிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் மலையக மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எனவே, உறுதிமொழியை மீறும் விதத்தில் காங்கிரஸ் செயற்படாது. என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் சமுர்த்தி உதவி பெறும் 100 குடும்பங்களுக்கு அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி உதவிக் கொடுப்பனவு பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு ஹற்றன் டிக்கோயா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தலைமை தாங்கி நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன் மக்கள் மத்தியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரசு எத்தகைய நல்ல விடயங்களைச் செய்தாலும் அதனை விமர்சித்து, குறை கூறும் விதத்திலான அரசியலையே எதிரணிகள் நடத்திவருகின்றன. மலையகத்திலுள்ள கட்சிகளும் அப்படிதான். பதவிகள் கிடைக்கவில்லை என் பதற்காக போலி பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றைப் பொருட்படுத்தாமல் நாம் மக்களுக்கு சேவையாற்றிவருகின்றோம். மக்களுக்கும் இது புரியும். கோதுமை மா விலை அதிகரிக்கப்படும்போது, பெருந்தோட்ட மக்களே உணவுக்காக அதிகளவு கோதுமை மாவை நுகர்கின்றனர். எனவே, அம்மக்களுக்கு சலுகை விலையில் கோதுமை மா வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இது தொடர்பில் எமது பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சு நடத்தினார். அதன் பலனாக 80 ரூபாவுக்கு கோதுமைமா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில் மலையக மக்கள் யாசகர்களா, எதற்காக கோதுமை மா வழங்கப்படுகின்றது என மலையகத்திலுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விமர்சிக்கின்றனர். இப்படிக் குறைகூறி அரசியல் நடத்துவதே அவர்களின் நோக்கம் என்பது இதன்மூலம் உறுதியாகின்றது. ஆயிரம் தொன் மாவு தேவைப்படுகின்றது. தற்போது அவை பகிரப்பட்டுவருகின்றன. எனவே, விரைவில் அத்திட்டம் வெற்றிகரமாக இடம்பெறும். அன்று நல்லாட்சியின்போது 50 ரூபாவைக்கூட பெற்றுக்கொடுக்க முடியாமல்போனவர்களே இன்று விமர்சன அரசியல் செய்கின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின்கீழ் மலையக மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிச்சயம் நாம் நிறைவேற்றுவோம். தற்போது ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மலையக உதவி ஆசிரியர் பிரச்சினைக்கும் விரைவில் தீர்வு கிட்டும்.- என்றார்.

## துப்பாக்கி மற்றும் ரவைகள் திருகோணமலையில் மீட்பு!



திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலையூற்று பிரதேசத்தில் துருப்பிடித்த நிலையில் துப்பாக்கி மற்றும் ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை பாலையூற்று பூம்புகார் கிழக்கு பிரதேசத்தில் வசிக்கும் தனிநபர் ஒருவரின் காணியிலிருந்து நீர் வடிந்தோடுவதற்காக குழாய் பொருத்தும் நோக்கில் கடந்த திங்கட்கிழமை பகல் வெட்டப்பட்ட நிலத்திலிருந்தே எஸ்.எம்.ஜி. ரக துருப்பிடித்த துப்பாக்கி ஒன்றும் மூன்று மகசீன்களும் மீட்கப்பட் டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படிநபர் அவ்வீட்டிற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்டார் எனவும் வீட்டின் உரிமையாளர் மேலதிக விசாரணைக்காக திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## திருமலை கந்தளாய் சீனி நிறுவனத்தின் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் விற்பனைக்கு!

திருகோணமலை கந்தளாய் சீனி நிறுவனத்தின் 85 வீத பங்குகளை சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்றை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ சமர்ப்பித்துள்ளார். இது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாளில் இருந்து பணிகளை ஆரம்பித்து 10 ஆண்டுகள் பூர்த்தியாகும் வரை முதலீடு செய்யும் நிறுவனத்திற்கு 85 வீத பங்குகளும் இலங்கை அரசுக்கு 15 வீத பங்குகளும் கிடைக்கும் என உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது.

10 ஆம் ஆண்டில் இருந்து 20 ஆண்டுகள் பூர்த்தியாகும் போது முதலீட்டாளருக்கு 75 வீத பங்குகளும் இலங்கை அரசுக்கு 25 பங்குகளும் கிடைக்கும். 20 ஆவது ஆண்டில் இருந்து முதலீட்டு காலம் முடியும் வரை இரண்டு தரப்பினரும் பெற்றுக்கொள்ளும் பங்கு வீதங்களுக்கு அமைய நிறுவனத்தின் உரிமை தீர்மானிக்கப்படும்.

இந்த அமைச்சரவை பத்திரத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைத்துள்ளது. இதனிடையே மேற்படி அமைச்சரவை பத்திரத்தின் மூலம் கந்தளாய் சீனி நிறுவனத்துக்குச் சொந்தமான 20 ஆயிரம் ஏக்கரை விற்பனை செய்யவும் ஆசியாவில் மிகப் பெரிய மதுபான உற்பத்தி தொழிற்சாலையையும் நிர்மாணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இதனைத் தாம் எதிர்க்கிறோம் என அந்த ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் குணதாஸ அமரசேகர கூறியுள்ளார்.

## மிகைவரி சட்டமூலத்தை உடன் மீளப் பெறாவிட்டால் அரசுக்கு எதிராக தொழிற்சங்க போராட்டம் வெடிக்கும்!

### அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் எச்சரிக்கை

உழைக்கும் வர்க்கத்தினருக்கு பெரும் பாதிப்பாக அமையவுள்ள மிகைவரி சட்ட மூலத்தை அரசு உடனடியாக மீளப்பெற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டம் வெடிக்கும் என அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கிட்ணன் செல்வராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஹற்றனில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை அதிகரித்ததால், அதனை நிவர்த்தி செய்வதற்கு புதிய வழிமுறையொன்று கையாளப்படும் என நிதி அமைச்சு அறிவித்திருந்தது. அதற்காக தற்போது மிகைவரி சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு தனக்குத் தேவையான நிதியைத் திரட்டிக்கொள்வதற்காக அறிமுகப்படுத்தியுள்ள இந்தக் கொள்ளைக்கார, மோசடி வரித்திட்டத்தால் உழைக்கும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் தமது அரசியல் இருப்புக்காகப் பல மோசடிகளில் ஈடுபடும் இந்த அரசு, தற்போது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றில் கைவைக்க முற்படுகின்றது.

அரசின் இந்த கொள்ளைக் காரத்திட்டம் தொடர்பாகத் தொழிற்சங்கங்கள் விழித்துக்கொண்டுள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாம் தெளிவுபடுத்தி வருகின்றோம். உழைக்கும் வர்க்கத்தின் பணத்தைச் சூறையாடும் மிகைவரி சட்ட மூலத்தை அரசு மீளப்பெறவேண்டும். இல்லாவிட்டால் தொழிற்சங்க போராட்டங்கள் வெடிக்கும்.- எனத் தெரிவித்துள்ளார்.

## மலையக மக்களின் வாழ்வியல்களை எடுத்துக்காட்டும் புகைப்படக் கண்காட்சி







மலையக மக்களின் தேவைகளைக் கண்டறிந்து நிறைவேற்றப்படாத நிலையிலுள்ள வேலைத் திட்டங்களை புகைப்படங்களினூடக சித்திரிக்கும் வண்ணம் 40 மலையக இளைஞர், யுவதிகளால் மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் 100 புகைப்படங்கள் உள்ளடங்களான புகைப்படக் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது.

யாழ் ஓவியக்கூடம் கலைத்தூது கலாமுற்றம் இல. 15 றக்கா வீதியிலுள்ள மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் மூலம் இந்த நாட்டுக்கு சொல்ல வருகின்ற செய்தியாக, 200 வருடமாகத் தீர்க்கப்படாத நிலையிலுள்ள மக்களின் அடிப்படை வாழ்வாதாரம் உள்ளிட்ட பிரச்சினைகளை அரசாங்கமோ ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களோ செய்ய முடியாத நிலையிலுள்ளன.

ஆகவே, மலையகத்தில் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுடைய திறமை மூலமாகவே இவ்வாறான புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இது அந்த பிரதேசத்தில் இருந்து பிறந்த பிள்ளைகள் தமக்கான நீதியை நிலைநாட்ட கோரியே இவ்வாறான புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன என மலையக மக்களின் சிறுவர் தேவைகளைக் கண்டறியும் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் அழகர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

இதில் மலையக கலைத்துறை மாணவர்கள் இதர பாடவிதான செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும், இந்தக் கண்காட்சி அதன் ஆரம்பத்தில் தலவாக்கல, பதுளை, பண்டாரவளை, கொழும்பு, கண்டி ஆகிய மாவட்டங்கள் ரீதியாகச் செய்யப்பட்டு இப்போது யாழ். மாவட்டத்திலும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது,



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 282

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**715.யோகி வெளிப்படுத்தியவை என்ன?**

பத்திரிகையாளரின் நீண்ட கேள்விகளுக்காக யோகி தெளிவுபடுத்திய பதில்கள் பெப்ரவரி 1990 இல் 'சர்வதேச ஐலன்ட்' 'Island International' பதிப்பில் பிரசுரமாகின.

அதில் அவர், இந்தியப் படைகளின் முனைப்பில் தமிழ் இளைஞர்கள் பலாத்காரமாக இழுக்கப்பட்டுச் சென்று, தமிழ் தேசிய இராணுவம் அமைக்கப்பட்டு, அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தியமை பற்றியும், அம்பாறை, கல்முனைப் பகுதிகளில் நடந்த சம்பவங்களையும் அவற்றில் விடுதலைப் புலிகளின் பங்கையும் விளங்கப்படுத்தினார்.

இந்தியப் படைகள் திட்டமிட்டே முதலில் அம்பாறையில் இருந்து வெளியேறி



யோகி

னர் என்றும், அங்கு மூவின மக்களும் வாழ்கின்றமையால், இந்தியப் படைகள் விலக, தமிழ்த் தேசிய இராணுவம் அங்கு மேற்கொள்ளும் தாக்குதல்களால் இனக் கலவரம் வரக்கூடிய சாத்தியங்கள் இருந்தன என்றும், அதைப் பாவித்து இந்தியப் படைகள் மேலும் நிலைகொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படாமல் முறியடிக்கவே தாங்கள் அங்கு தமிழ்த் தேசிய இராணுவத்தின் இரண்டு முகாம்களை முன்னெச்சரிக்கையாகத் தாக்கினர் என்றும் அவர் சொன்னார்.

அதைத் தொடர்ந்து அவர்கள் தங்களைத் தாக்குவதற்காக பொலிஸ் நிலையங்களையும் ஸ்ரீலங்கா இராணுவத் தளங்களையும் தாக்கினார்கள். இதில் அவர்களுக்கு இருந்த உத்தி, தங்களைப் பாதுகாக்க சிங்கள இராணுவம் வெளியேறி தாக்கும், அவற்றில் ஏற்படும் மரணங்களையும் அழிவுகளையும் அவர்களுக்குச் சார்பான அரசியல் குழுக்கள், ஸ்ரீலங்கா அரசு இனப்படுகொலை நடத்துகிறது என முன்னரைப் போல பிரசாரப்படுத்தி இந்தியப் படைகள் தொடர்ந்தும் நிற்க வேண்டும் என்று நிர்ப்பந்தத்தில் வழிகள் தேடுவதற்கானது.

இவற்றைத் தடுக்க தகப்பன் சாமியாக சிவன், சண்முகனின் காலடியில் இருந்து பிரணவ மந்திரத்தைக் கேட்ட விதமாக, பிரேமதாஸா தங்களது அறிவுரைகளைக் கேட்டமையையும் அவர் சொல்கிறார். அவர்களது புத்திமதியை ஏற்று இனப்படுகொலை என்ற பரப்புரைகளுக்கு இடமளிக்காமல் தடுக்க பிரேமதாஸா சிங்கள இராணுவத்தை முகாம்களையோ, சிங்களப் பொலிஸாரை பொலிஸ் நிலையங்களையோ விட்டு வெளியேற வேண்டாம் என உத்தரவிட்டு தமிழ்த்தேசிய இராணுவத்தை அழிக்கும் பணியை விடுதலைப் புலிகளிடமே பொறுப்புத் தந்தார்.

ஆக, அந்த இனப்படுகொலைகள் தமிழ் மக்களால் தங்களுக்கு எதிராகவே சிங்கள அரசின் உதவிகளோடு நடத்தப்பட்டவையாக முடிந்தன. குழுக்களின் உட்பூசலாக அவை கணக்கு வைக்கப்பட்டன. மேலும் இந்தியாவுக்கு அனுசரணையாக இருந்த எந்தக் குழுவினோடும் – முக்கியமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். உடன் – சேர்ந்து மாகாண சபைகளை நடத்தப் போவதில்லை எனவும், தமிழ்த் தேசிய இராணுவத்துடன் எதுவித பேச்சுவார்த்தைகளையோ சமாதானத்தையோ ஏற்படுத்திக் கொள்ளப்போவதில்லை எனவும் யோகி உறுதிப்படப் பதிலளித்தார்.

மாகாண சபை கலைக்கப்பட்டு அவற்றிற்காக நடத்தப்படும் புதிய தேர்தல்களில் விடுதலைப் புலிகள் பங்கு பற்றி மாகாண சபையை ஏற்று நடத்துவார்கள். அந்தத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளிடையேயிருந்து மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளோடு நாம் பேச்சு வார்த்தைகள் நடத்துவோமேயொழிய தற்போதைய இந்தியாவின் அடிவருடிகளுடன் எதுவித தொடர்புகளும் வைக்கும் எண்ணமில்லை என்பதுவும் தெரிவிக்கப்பட்டது.

கருணாநிதியுடன் பின்னர் நடந்த பேச்சுவார்த்தைகளில் பாலசிங்கமும் யோகியும் கலைக்கப்படாத மாகாணசபையுடன் இணைந்து செயல்படத் தயாராகவில்லை என்பதை ஆணித்தரமாக தெளிவுபடுத்தினர்.

ஆயின் இந்தியப் படைகளை வெளியேற்ற விடுதலைப் புலிகளையே பாவித்துக் காரியங்கள் சாதித்து வெற்றி பெற்ற பிரேமதாஸா, இப்பொழுது அவர்களுக்குக் குழிபறிக்க ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடனும் மற்றத் தமிழ் குழுக்களுடனும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி விடுதலைப் புலிகளை அந்நியப்படுத்தி, ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கையளித்து விட்டால் விடுதலைப் புலிகளும் மாகாண சபைத் தேர்தலில் பங்கு பற்றலாம் என்று



பத்மநாபா

அறிவித்து, மாகாணசபையையும் கலைத்து விட்டார்.

அதற்குப் பிரேமதாஸா பாவித்த காரணம் முதலமைச்சர் வரதராஜபெருமாள் மாகாண சபையை அரசமைப்பின் 6 ஆம் சட்டதிருத்தத்துக்கு எதிராக குடியரசு மன்றாக மாற்றி, சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கான தீர்மானத்தை நிறைவேற்றினார் என்பதே.

**716.பிரேமதாசாஸாவின் அரசு ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடனும் மற்ற கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்ததால் வரதராஜ பெருமாள் நிறைவேற்றியிருந்த ஒருதலைப்பட்சமான சுதந்திரத் தீர்மானத்துக்கு என்ன நடந்தது?**

மாகாண சபையைக் கலைத்து விடுமாறு புத்திமதி தர இன்றைய இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அன்று தூதரக அதிகாரியாக அனுப்பப்பட்டார். ஆயினும் வரதராஜ பெருமாள் அந்த புத்திமதியை ஏற்காது, தான் தனது இயக்கத் தலைவர் பத்மநாபாவுடனும் கட்சியுடனும் கலந்தாலோசித்து முடிவு தருவதாகப் பதிலளித்தார். முடிவு வடக்கு, கிழக்கு மாகாண சபை ஒருதலைப்பட்சமாக 'சுதந்திர ஜனநாயகத் தமிழீழ குடியரசு' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியதாக இருந்தது.

விடுதலை வேட்கையில் முதலில் தன்னுயிரை ஈந்த சிவகுமாரனோடு சிறையில் வாழ்ந்த நாள்களில் வரதராஜப் பெருமாளுக்கும் மற்ற இளைஞர்களுக்கும் 'ஈழத் தமிழகம்' தனிநாடாக



வரதர்

வேண்டும் என்ற எண்ணம் அவர்களின் மனங்களில் ஆழப்பதிந்து இருந்தது. (அந்த நாள்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கவில்லை.) அந்த எண்ணங்களின் நடைமுறைகள் தானோ என்னவோ வரதராஜப்பெருமாளையும் பத்மநாபாவையும் சுதந்திர ஜனநாயகக் குடியரசை நிறுவும் தீர்மானத்தை நிறைவேற்ற தூண்டியன.

இதனால் பிரேமதாஸா கொதித்துப் போய் இருந்தாலும் இந்தியப் படைகள் முற்றாக வெளியேற வேண்டும் என்பதற்காக வரதராஜபெருமாளுக்கும் ஏனைய மாகாண சபை அங்கத்தினர்களுக்கும் எதிராக அவர் ஏதும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானம் இந்தியாவுக்கும் சலசலப்பை தந்தாலும், அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. நிராகரித்து அறிவிப்புகள் தெரிவிக்கவும் இல்லை. அந்தக் காலகட்டத்தில் பிரேமதாஸா அரசுடன் இருந்த உறவுகள் பலமாக சீரழிந்து, நம்பிக்கைகள் இல்லாத நிலைக்குப் போயிருந்தன. இந்தியப் படைகளை தாக்கு



பிரேமதாஸா

வதற்கு விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களும், அவர்கள் மறைந்து வாழ்வதற்கு ஸ்ரீலங்காவின் இராணுவ முகாம்களையும் பொலிஸ் நிலையங்களையும் மற்ற வசதிகளையும் பிரேமதாஸா அரசு செய்திருந்தது. இது இந்தியாவைப் பெரும் கோபத்திற்கு ஆளாக்கியிருந்தது. அவற்றால் வரதராஜப்பெருமாளுக்குப் பாதுகாப்பு தருவதானால் அது எந்த அடிப்படையில் தரப்பட வேண்டும் என்ற கேள்விகள் எழுந்தன. அவர் சுதந்திர ஜனநாயக தமிழீழக் குடியரசின் தலைவராகவா அன்றில் வட கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராகவா கருதப்பட வேண்டும் என்பது தலையிடி தரும் விடயமாகியது. இவை பற்றி வரதராஜப்பெருமாளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அவருக்கு இப்படியான பாதுகாப்புத் தருவதில் ஸ்ரீலங்கா அரசுக்கு விருப்பம் இருக்கவில்லை. தங்களது இறைமைக்கு மாறாகவே இந்தியா செயல்படுகிறது என ஆட்சேபங்கள் தெரிவித்தனர்.

வரதராஜப்பெருமாள் முதலில் மொரிசியஸ் தீவுக்கு கொண்டு செல்லப்பட்டு, மூன்று மாதங்களின் பின் இந்தியாவின் வட பகுதி மாநில நகரான ஜெய்ப்பூருக்கு பாதுகாப்புக்குக் கொண்டு செல்லப்பட்டார். அந்த நாள்களில் இந்தப் பாதுகாப்புக்கள் பற்றி இரு தரப்பும் இழுபறிப்பட்டன. அங்கு அவருக்கு ஒரு முதலமைச்சருக்கு வழங்கப்படும் சகல மரியாதைகள், உதவிகள், பாதுகாப்புக்கள் தரப்பட்டன. அதுவரைக்கும் அவர் சுதந்திர ஜனநாயக தமிழீழக் குடியரசையோ வடகிழக்கு மாகாண சபையையோ கலைக்கவில்லை.

மாற்றான் வீட்டு முல்லையும் மணம் தரும் என்று அறிஞர் அண்ணா கூறியிருந்தார். தன் காதலி சகுந்தலை பெற்றெடுத்த குழந்தையை தனதென்று ஏற்க துஷ்யந்தன் மறுத்தான். தமிழ் மக்களின் இறைமைக்கான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது இந்திய மண்ணிலே வரதராஜப்பெருமாள் மூலமாக முளைவிட்டிருந்ததால் துரோகிகள், துரோகத்தால் நடத்தியதை ஏற்க முடியாது என்றும் தீர்மானம் மீளப்பெறப்பட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்தார்கள். சர்வதேச ரீதியில் இந்த முளையைப் பாதுகாத்து வளர்த்திருக்கலாமா என்பதை தமிழ் புத்திஜீவிகள் சிந்தித்து ஆர்வம் காட்டவில்லை. விடுதலைப் புலிகளின் ஏகோபித்த தலைமைவாதம் மற்ற யாபேரையுமே துரோகிகளாக்கியிருந்தது.

(வளரும்)

காலைக்கதிர்
Kalaikkathir

# பொருளாதார நெருக்கடிகளுக்கான மாற்றத்தை ஆட்சிக்கு யார் வந்தாலும் ஏற்படுத்தமுடியாது

## பிள்ளையான் சூளுரை







தற்போதுள்ள சூழ்நிலையில் எதிர்க் கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் மந்திரத்தால் மாங்காய் பறிக்கலாம் என்ற சூழ்நிலையில் ஊடகங்கள் உருவாக்க முயற்சிக்கின்றனஎனவும்யார்ஆட்சிக்குவந்தாலும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில்சடுதியானமாற்றத்தைக்கொண்டுவர முடியாது என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வரவு - செலவு - திட்டத்துக்கமைவாகசமுர்த்திபயனாளர்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவை மேலும் அதிகரித்து வழங்குவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இந்த நிகழ்வை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகள் நாடு பூராகவும் இடம்பெற்றுள்ளன.

இதன்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த நிகழ்வு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நிகழ்வு யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் வறிய கிராமமாக அடையாளப்படுத்தப்பட்ட மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிலும் இந்நிகழ்வு இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் அ.சுதாகரன், உதவி பிரதேச செயலாளர் சுபா சதாகரன் உட்பட சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 97 ஆயிரம்சமுர்த்திபெறும்குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் நிலையில் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவில் சுமார் 7 ஆயிரம் பேருக்கு இந்தக் கொடுப்பனவுகளைவழங்கநடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வின்போது சமுர்த்தி பயனாளிக்கான வீடு ஒன்றும் வழங்கிவைக்கப்பட்டதுடன் வாழ்வாதார உதவிகளும் வழங்கிவைக்கப்பட்டன. அத்துடன் சமுர்த்தி அதிகரித்த கொடுப்பனவுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது அரசாங்கம் முன்னெடுத்து வரும் மக்கள் நல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் பயனாளிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்-

நாடு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளபோதிலும் அரசாங்கம் கிராம மட்ட பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றது.

அதன் அடிப்படையிலேயே சமுர்த்தி பயனாளிகளுக்கு அமைச்சரவையின் அனுமதியுடன் அதிகரித்த நிதி வழங்கப் படுகின்றது. இலங்கை அரசாங்கம் அரசாங்க செலவீனங்களை மிகக் கடுமையாகக் கட்டுப்படுத்தி வருகின்றது.

எங்களுக்கு கூட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் செலவுகளைக் கட்டுப்படுத்துவது போன்று குடும்பங்களும் அத்தியாவசிய தேவைகளுக்குப் பணத்தை செலவு செய்ய வேண்டும். இன்று கிராம மட்டத்தில் இவ்வாறான நிலையேற்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது.

சிலர் ஏதோ இலங்கைக்கு மாத்திரம் தான் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது போன்று பேசி வருகின்றனர். இன்று சர்வதேசம் எங்கும் பொருளாதார நெருக்கடி காணப்படுகின்றது. மிக நீண்டகால முடக்கம் நாட்டில் முன்னெடுக்கப்பட்டதன் காரணமாக இந்த நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒவ்வொருவரும் செயலாற்ற வேண்டும். இன்று கொவிட் தொற்று அதிகரிக்கும் சூழ்நிலை காணப்படுகின்றது.

இந்த சூழ்நிலையை மக்கள் சிறந்த முறையில் கையாண்டு, மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற போது தான் நாடு உயரமுடியும். இதில் வெறுமனே அரசாங்கம் பிழைவிடுகின்றது, எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தால் மந்திரத்தால் மாங்காய் பறிக்க முடியும் என்றுஊடகங்கள்உருவாக்கமுனைவது தெரிகின்றது. நிச்சயமாக அப்படி செய்ய முடியாது.

எவர் ஆட்சிக்கு வந்தாலும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியை சடுதியாக மாற்ற முடியாது. இருந்தபோதிலும் உறுதியான அரசாங்கம், மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ள அரசாங்கம் என்ற அடிப்படையில் இதனை மிகவும் கவனமாக முகாமை செய்து மீண்டெழுந்து வருகின்றது எனவும் இதன்போது கருத்துத் தெரிவித்துள்ளார்.

## இராணுவ அதிகாரிகளுக்கு புதிய கடன் திட்டம் அறிமுகம்

இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு ‘விரு அபிமான’ என்ற புதிய கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் இராணுவத் தலைமையகத்தில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வீடுகள் கட்டுவதற்காக இந்த கடன் திட்டம் வழங்கப்படுகிறது.


## முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் வீட்டில் வன்முறைக் கும்பல் நேற்றுத் தாக்குதல்!

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அளவெட்டி மேற்கு பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 12.15 மணியளவில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டில் வன்முறைக் கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அளவெட்டி மேற்கு ஜே-220 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் வலி. வடக்குபிரதேச சபையின் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான நல்லையா புரட்சிதாசனுடைய வீட்டுக்குள் அத்துமீறி உள்நுழைந்த வன்முறைக்கும் பல் ஒன்று வீட்டின் முன் கதவு,





தகரங்கள், வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளது.

இதனையடுத்து கதவுகள் மற்றும் மோட்டார் வாகனத்தின் எரிபொருள் தாங்கி என்பன பலத்த சேதத்திற்குள்ளான நிலையில் வீட்டின் கதவை திறக்க முடியாத நிலையில் வன்முறைக் குழு தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளரான வலி.வடக்கு பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் முன்னாள் உறுப்பினர் நல்லையா புரட்சிதாசன் நேற்றுக் காலை தெல்லிப்பழைபொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். இந்நிலையில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.பல்கலை மாணவிகள் இருவர் பளு தூக்கல் போட்டியில் சாதனை





லங்கை பளு தூக்கும் சுவட்டமைப்பால் நடத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான பளுதூக்கல் போட்டியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 42 ஆவது அணி சார்பாக பங்குபற்றி இரண்டு மாணவிகள் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்கள்.

87 கிலோ பிரிவில் ஜீவமலர் இரண்டாம் இடத்தையும், 71 கிலோ பிரிவில் திவ்வியா இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்கள். யாழ். பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்த மாணவிகள் இருவருக்கும் பலரும் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.02.2022இல் வெளியிடப்பெற்றது.